# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 44வது கூட்டறிக்கை 2021.10.12

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 44வது அமர்வு 2021.10.12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 20. | திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 44வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த காலகட்டத்தில் வருமானம் இல்லாமல் மட்டுமல்ல செய்யக் கூடிய வேலைகளுக்கு பொருட்களை எடுக்க முடியாத ஒரு நிலையில் இந்த சபையின் வேலைகளைக் கொண்டு செல்வது மிகவும் ஒரு கஸ்டமான விடயமாக வந்திருக்கின்றது. UNDP இன் உதவியோடு LDSP திட்டத்தின்

கீழ் நான் சென்ற சபையில் கூறியவாறு நமது தொலைத்தொடர்புகளை நவீனமயப்படுத்துவதற்கான ஏற்பாடுகளுக்குரிய பணங்கள் பெறப்பட்டு Sri Lanka Telecom இற்கு செலுத்தப்பட்டு இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 25ம் திகதி அவர்கள் வேலைகளை ஆரம்பித்து நவம்பர் 10 ஆந் திகதிக்கு முதல் அதை செயற்படுத்தும் வசதிகள் நமக்கு வந்து சேரும். அத் திட்டம் வந்ததும் மக்கள் சபைக்கு வராமலே பல விடயங்களை செய்யக்கூடிய சூழல் உருவாகும் என்று நினைக்கின்றேன். இன்றைய புதிய வழிமுறையில் மக்களின் நடமாட்டத்தை குறைப்பதுதான் உலகளாவிய ரீதியில் அரசாங்கம் எடுக்கும் முயற்சி. அதில் நமது சபையும் தெரிவு செய்யப்பட்டு அந்த வசதிகள் கிடைப்பது நமக்கு ஒரு வரப்பிரதாசம் என்று நினைக்கின்றேன்.

அதே வேளை இப்போது இவ் அரசாங்கம் விவசாயத்தினை இரசாயனப் பசளை இன்றி செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானத்தினால் நாம் உற்பத்தி செய்யும் பசளையின் கிராக்கி கூடி நமது உற்பத்தி போதியளவு உற்பத்தி செய்ய முடியாத நிலையில் சில இயந்திர கோளாருகளினால் நாம் தடைப்பட்டிருந்தோம். ஆனால் அவைகளை நிவர்த்தி செய்து இந்த மாதம் 1ம் திகதியில் இருந்து பசளையின் விலையை 20.00 ரூபாவாக மாற்றி 01Kg 20.00 ரூபாவாக விற்கப்படுகின்றது. அதில்கூட நமது செலவீனம் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட 01Kg இற்கு 28.00 ரூபா முடிகின்றது. வருகின்ற காலங்களில் அந்த சேதனப் பசளையினை ஒரு பசளையாக மாற்றுவதற்கு மற்ற கனிப்பொருட்களையும் சேர்த்து அதற்கு ஏற்ற விலையை நிர்ணயித்து ஒரு வியாபாரமாக செய்ய வேண்டிய சூழல் ஒன்று உருவாகி இருக்கின்றது. வருமானம் கூட்ட வேண்டிய தேவையும் நமக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையில் இன்று சேதனப்பசளை செய்வதற்கும் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கும் அரசாங்கம் முன்னுரிமை கொடுத்து செயற்படுகின்றது.

அரசாங்கம் செப்டம்பர் 1ம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படாத எந்தவொரு அபிவிருத்தி வேலையையும் ஆரம்பிக்கக்கூடாது என்ற ஒரு கட்டளையினால் நமக்கு வந்தும் செயற்படுத்த முடியாத சில திட்டங்கள் சென்ற கூட்டத்தில் கூறியிருந்தேன் 04 மில்லியன் பெறுமதியான மின்விளக்குகள் கொள்வனவு செய்ய முடியாமல் போய்விட்டது. நிதி நிலவரத்தில் கொவிட் காலங்களில் நாம் குத்தகைகளின் கழிவுகளினால் இன்று வரைக்கும் 80 இலட்சம் கழிவாக கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டு இருக்கின்றது. அதற்கான அனுமதியினை நாம் ஆளுநரிடம் இருந்து செயற்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கின்றது.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

## தீர்மானம் - 04/44/01

சென்ற மாதம் 2021.09.01 தொடக்கம் 2021.09.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்எம்.எம்.முஸ்தபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

திறந்த வெளிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றினை 2022ம் ஆண்டிற்காக குத்தகைக்கு விடுவதற்கு கேள்வி கோருதல். இதில் சென்ற வருடத்தின் தொகையைத்தான் போட வேண்டும். சென்ற வருடத்து தொகையில் கிட்டத்தட்ட 50% இந்த வருடம் அனுபவிக்கின்றோம். அடுத்த வருடம் அந்த நிலமை திருந்தும் என்ற எண்ணத்தில் இந்த கோரிக்கை விளம்பரம் செய்யப்படும்.

## தீர்மானம் - 04/44/02

திறந்த வெளிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றினை 2022 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு அசாதாரணமான நிலமை காரணமாக 2021 இல் கேள்விகாரர்களால் பெறப்பட்ட தொகையினை ஆரம்ப தொகையாக வைத்து கேள்வி கோருவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாவிக்க முடியாத கைமரங்கள், ஓடுகள், சீட்டுக்கள் என்பவற்றை ஏலத்தில் விற்பனை செய்தல். இதில் எதை அகற்ற வேண்டும், எதை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்ற முடிவை சபை அங்கத்தவர்களும் சேர்ந்து செய்வது நல்லது என்று நினைக்கின்றேன். பழைய சந்தையில் கழற்றப்பட்ட பொருட்கள் சிலவற்றை பாவிக்கலாம். அவ் வட்டாரத்தின் அங்கத்தவர் கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை இணைந்து குழுவாக இயங்கி அதை பார்வையிட்டு அவர்கள் எடுக்கின்ற தீர்மானப்படி அதை செய்ய வேண்டும்.

### தீர்மானம் - 04/44/03

சபையின் பராமரிப்பின் கீழ் இருந்த கட்டடங்களில் இருந்து கழட்டப்பட்ட பாவிக்கமுடியாதுள்ள கைமரங்கள், ஓடுகள், சீட்டுகள் என்பவற்றை நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனைக்கு ஏற்ப ஏலத்தில் விற்பனை செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மின் விளக்குகள் திருத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மஹேந்திரா கப் வாகனம் மற்றும் Auto Van போன்ற வாகனங்களை திருத்தம் செய்தல். இதை உள்ளூர் கராச்களில் செய்து வந்தோம். தற்போது செயலிழந்து விட்டது. அது இரண்டையும் IDEAL Motor மஹேந்திரா Agent அம்பாரையில் கராச் திறந்துள்ளதால் அவர்களிடம் அதை கொடுத்து அந்த நிறுவனம் மூலம் திருத்தி எடுப்பதற்கான தீர்மானம்.

### தீர்மானம் - 04/44/04

மின் விளக்குகள் திருத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மஹேந்திரா கப் வாகனம் (LE – 7441) மற்றும் Auto Van (QY – 8318) போன்ற வாகனங்களை அம்பாரையில் அமைந்துள்ள மஹேந்திரா நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட ஏக நிறுவனமான IDEAL நிறுவனத்தில் முழுமையாக திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/44/05

2021 இல் குத்தகைக்கு வழங்கப்பட்ட இறைச்சிக் கடைகள், ஹிஜ்ரா பொதுச்சந்தை, ஆலையடிச் சந்தை என்பன கொவிட் 19 காரணமாக மூடப்பட்டதனால் வாடகையில் கழிவு வழங்குவதற்கும், அதனை வருமானத்திலிருந்து பதிவளிப்பதற்குமாக கௌரவ ஆளுநரிடம் அனுமதி பெறுவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Night Soil Treatment தொடர்பாக சென்ற கூட்டத்தில் கூறியிருந்தேன். அதற்கான அனுமதி வந்தது. ஆனால் அந்த அனுமதியை செயற்படுத்துவதற்கு நமக்கு அனுமதி இல்லை. உள்ளூராட்சி ஆணையாளர் செய்திருக்க வேண்டும். அவர்களுக்கு ஆளணி இல்லை என்று அவர் மீண்டும் எம்மிடம் தந்தார். தந்ததனால் நாம் Paper இல் Tender செய்தால் ஒரு மாதம் செலவாகும். நாங்கள் செய்வது என்றால் Shopping Method இல் செய்ய வேண்டும். நாங்கள் குறுகிய வட்டத்திற்குள் செய்யலாம். இதை எப்படி செய்தாலும் Quotation செய்தால்தான் செய்ய வேண்டும். அது புதிய German Technology அது இன்னும் வரவில்லை. அவ்வாறு வந்தால் செயற்படுத்தலாமா என்ற கேள்வி வருகின்றது. இது நிலத்திற்குள் புதைக்க வேண்டிய விடயம். Contractor கூறுகின்றார் 15ம் திகதிக்குள் அனுமதி தருவீர்கள் என்றால் நான் டிசம்பர் 15 இற்குள் முடித்து தருவேன் என்று. அவரிடம் கூறினோம் எங்களுக்கு அனுமதி தந்தால் துரிதமாக முடிவு எடுத்து தருவோம். ஆனால் எந்த கொடுப்பனவும் தர இயலாது. அரசாங்கம் தந்தால்தான் நாங்கள் தரலாம். அந்த நிபந்தனைக்கு நீங்கள் ஒத்து வந்தால் செய்யலாம். அரசாங்கம் தரும் என்று நம்பி நாம் கொடுப்பதற்கு தற்போது நம்மிடம் வசதி இல்லை. நமக்கு தற்போது இருக்கின்ற கையிருப்பு முதலாம் மாதம் வரைக்கும் சம்பளம் கொடுத்து செல்லக்கூடிய அளவுக்கு எல்லாம் வல்ல இறைவனின் உதவியோடு நமது கையிருப்பில் இருக்கின்றது. அதனால் அனுமதி வந்தால் அதனை செய்வதற்கு தீர்மானம் எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த திட்டத்தின் பெறுமதி எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
9.9 மில்லியன். இந்த சபையில் ஏற்கனவே கூறியது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Open Tender இல் கொடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Open Tender இல் செய்வது என்றால் Paper இல் போட்டு 21 நாள் கொடுத்து செய்வதானால் ஒரு மாதம் செலவாகும். அப்படி Open Tender இல் போட்டு எடுத்தாலும் நாம் போடுகின்ற நிபந்தனைக்கு ஒருவர்தான் Tender பண்ணலாம். இது ஒரு புது Technology. வேறொருவரிடமும் இது இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதை Open Tender இற்கு கொடுப்போம். இது பொதுமக்களின் சொத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது நாம் செய்கின்ற வேலை இல்லை. மாகாண சபை செய்ய வேண்டும். அவர்கள் செய்வதற்கு ஆட்கள் இல்லை என்று நம்மிடம் தந்திருக்கின்றார்கள். பிரதம செயலாளர் அவர்கள் சபைகளுக்கு Shopping Method இல் செய்வதற்கு அனுமதி தரலாம். அதுவும் Tender தான் ஆனால் இது குறுகிய வட்டத்திற்குள் செய்வது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Open Tender இல் போவது நல்லம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் சபையின் ஆயுட்காலம் சிலநேரம் ஜனவரி மாதம் அல்லது பெப்ரவரி மாதத்தில் முடிந்தாலும் நாம் இப்போது செய்கின்ற நடவடிக்கைகள் பின்னர் Audit வந்து பிரச்சினைகள் வருவதை விட செய்வதை ஒழுங்காக செய்தால் நல்லது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் சொல்கின்ற முறையில் செய்தால் எந்த ஒழுங்கீனமும் இல்லை. காலதாமதத்திற்காக செய்வதுதான். அப்படி நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பீர்களானால் நாம் வாக்கெடுப்புக்குச் செல்வோம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Open Tender இற்கு போனால் நீங்கள் சொல்வது மாதிரி கிட்டத்தட்ட 02 மாதம் செல்லும். அது காலம் காணாது. Shopping Method என்பதனை மாகாண சபையில் Register பண்ணப்பட்ட ஒப்பந்த காரர்களுக்குதான் செய்யப்போகின்றோம். அதனால் நமக்கு எந்த பாதிப்பும் இல்லை. அதனை அவசரமாக செய்வதற்குரிய நடவடிக்கையை எடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

விலைமனு கோரி தொழில்நுட்ப மதிப்பீடு செய்து அதற்கு பின்னர் செயற்படுத்துவது என்றால் இது ஊருக்கு மட்டுமல்ல இந்த மாவட்டத்திற்கோ முக்கியமான விடயம். நமக்கு கழிவு எடுத்து அகற்றுவதற்கு இடம் இல்லை. மழைகாலம் வந்தவுடன் தான் இந்த தேவை ஏற்படுவது. அந்த குழுவில் நீங்கள் எல்லோரும் அங்கத்தவர்களாக இருந்து செய்யலாம். இதை சம்மாந்துறையில் செயற்படுத்துவோம் என்றதனால்தான் இந்த தடைகள் இருந்தும் சம்மாந்துறைக்கு அனுமதி வந்தது. இதை செய்வது என்றால் ஒன்று இறக்காமம் அல்லது சம்மாந்துறை அல்லது ஆலையடி வேம்பு பக்கம் தான் செய்யலாம். செப்டெம்பர் இல் வந்தது இன்னும் செயற்படுத்த இயலாமல் உள்ளது. இன்னும் அனுமதி வரவில்லை. அதற்கு பின்னர் அந்த Procedure செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதே போன்றுதான் நமது Digital Board நாம் நினைக்கின்ற மாதிரி இயங்கவில்லை. இதே போல் வராமல் பாதுகாக்க வேண்டும். துரிதமாக செய்ய வேண்டும் என்பதில் 06 பேச்சஸ் இருக்கும் மடுவத்தில் இருக்கின்ற தாங்கிகள். எதுவும் இல்லாமல் அப்படியோ இருக்கின்றது. அதை நாம் அப்படியோ வைத்துவிட்டு இருக்க இயலாது. பக்கத்தில் ஆடைத்தொழிற்சாலை இருக்கின்றது. தற்போதும் நமது கழிவுகள் வெளியில்தான் செல்கின்றது. முந்தநாள் சென்று பார்த்தேன் பழைய மடுவம் எப்படி இருந்ததோ அதே மாதிரித்தான் இருக்கின்றது. முதலும் ஒரு முறை சொன்னேன் இரண்டுக்கும் இடைப்பட்ட தூரத்தை கொங்கிறீட் இட வேண்டும் என்று, வாகனம் செல்வது கொங்கிறீட் இடப்படவில்லை. மற்றது தண்ணீர் எடுப்பது என்று சொல்லி அதுவும் மலை என்று கைவிடப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தயவு செய்து இந்த விடயங்களை ஆழமாக படித்து பேசுங்கள். எதிர்ப்பதற்காக பேசாதீர்கள். Water Board Issue வை நன்றாக படித்தால் விளங்கும். அவர்கள் அறிக்கை செய்து எதிர்பார்த்த மாதிரி தண்ணீர் வராததனால் அதற்குரிய பணம் வருகின்றது. சபையில் மனவருத்தப்படுவது என்னவென்றால் விடயங்களை ஆழமாக படித்து வந்து கேட்டு அறிந்து செய்யாமல் குறைகூறுவது மாதிரி சபையில் பேசும் போது எனக்கு மனவருத்தம். நான் ஒவ்வொரு நாளும் வந்து வேலை செய்கின்றேன். உங்களுக்கு ஒரு பொறுப்பு தந்தால் ஒரு மாதம் செல்கின்றது என்னிடம் கொண்டு தருவதற்கு. Digital Board என்று கதைக்கின்றீர்கள். அந்த சம்பவம் எல்லாம் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களுக்கு தெரியும். எந்த ஒழிவு மறைவும் இல்லை. நாம் ஒரு முடிவு எடுத்தோம் அதில் ஏமாற்றம் அடைந்து விட்டோம். அதற்குரிய சட்ட நடவடிக்கை எடுக்கின்றோம். இதில் எல்லாவற்றிலும் நான் மிகவும் கவனமாக இருக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறைகூறுவதாக நான் கதைக்கவில்லை. மீண்டும் மீண்டும் நமக்கு ஒரு பின்னடைவு வரக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முடிவுகள் எல்லாம் நாம் கூட்டாக எடுக்கின்றோம். கண்காணிப்பையும் கூட்டாக செய்தால் நன்றாக நடக்கும் Night Soil Treatment Plant இற்கு Shopping Method இற்கு மாற்றுக்கருத்துக்கள் இருப்பதால் வாக்கெடுப்பிற்கு செல்வோம்.

### தீர்மானம் - 04/44/06

Night Soil Treatment Plant பிரதம செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெறுமாயின் Shopping முறையில் வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

இப் பிரேரணைக்கு 15 உறுப்பினர்கள் சார்பாகவும், 03 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர். ஒரு உறுப்பினர் நடுநிலை வகித்தார். இப் பிரேரணை 11 மேலதிக வாக்குகளால் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/44/07

எமது சபையில் தொண்டர் அடிப்படையில் பயிற்சிக்காக வருகை தரும் பயிலுனர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக நாள் ஒன்றுக்கு ரூபா 300.00 வீதம் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம்.சஹீல் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வரவு செலவுத் திட்டம் தொடர்பாக உங்களது முன்மொழிவுகளை இரண்டு சபைகளில் கோரியிருந்தோம். ஆனால் இன்றுவரைக்கும் எந்தவொரு முன்மொழிவுகளும் வரவில்லை. கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அதில் ஆர்வமாக இருப்பதனால் சென்றமுறை செய்தவாறு சனசமூக நிலையம், நிபுணர்கள், கௌரவ உறுப்பினர்கள் எல்லோரையும் சேர்த்து கலந்துரையாடல் செய்து அந்த முன்மொழிவுகளை 30ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கிட்டத்தட்ட 03 மாதமாக எந்த அபிவிருத்தி வேலைகளும் செய்யவில்லை. மாரிகாலம் ஆரம்பிப்பதனால் மழையினால் பாதிக்கப்படும் வேலைகளை செய்ய வேண்டி இருக்கின்றது. சின்னப்பள்ளி வட்டாரத்தில் ஒரு கல்வெட் உடைந்திருக்கின்றது. அதே போல் தைக்காப்பள்ளி வட்டாரத்திலும் உடைந்திருக்கின்றது. வளத்தாப்பிட்டியில் Retaining Wall அமைத்தல்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த திட்டத்திற்குள் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் இருக்கின்ற நிலத்திற்கு வேலி அமைக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற கூட்டத்தில் அதற்கு தீர்மானம் எடுத்துவிட்டோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே போல் பல்கலைக்கழகத்திற்கு பின் பக்கம் அவர்களின் கழிவு நீர் வெளியேறுகின்றது. மழைகாலத்தில் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அதை உடனடியாக PHI இனை அனுப்பி தடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கல்முனை 1வது லேனில் ஒரு துண்டு செய்ய வேண்டி இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதை செயற்படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ரா 1ம் வீதியில் காபட் செப்பனிடப்பட்ட வீதியில் முடிகின்ற இடத்தில் இடது பக்கமாக வடிகான் மற்றும் ஹிஜ்ரா 1ம் வீதியில் மபாஸா பள்ளி முன் வீதியும் சந்திக்கின்ற கல்வெட் நீண்ட நாளாக நடுவில் உடைந்து தென்னங்குற்றி வைக்கப்பட்டு இருக்கின்றது. அதனையும் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மிக நீண்ட நாட்களாக இந்த சபையிலே பேசப்பட்டு வந்த விடயம் தென்னம்பிள்ளைக் கிராமத்திலே உள்ள கல்வெட். இன்றும் கூட அந்த கல்வெட் திருத்தம் செய்யப்படாமல் மிகவும் கஸ்டமான முறையில் மக்கள் அதனால் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த முறை டிசம்பர் மாதத்திலும் கூட இந்த சபையினால் செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வேலைகளில் அதனை செய்வதற்காக எத்தனித்த போதும் காலநிலை சூழ்நிலை காரணத்தினாலும் ஏதோ ஒரு வகையில் PSDG திட்டத்தில் செய்யலாம் என்ற எண்ணத்திலும் கைவிடப்பட்டது. 03 வருடங்களிலும் கைவிடப்பட்டு வருகின்றது. எனவே அந்த கல்வெட்டை திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் திட்டத்தில் போடப்பட்டுள்ளதா?

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, போடப்பட்டுள்ளது. இந்தக் கிழமைக்குள் அதன் அனுமதி வரலாம். வடிகானும் கல்வெட்டும் செய்வதற்குரிய ஏற்பாடு செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ்வாறே 03 வருடங்களும் அந்த வேலைத்திட்டங்கள் தடுக்கப்பட்டுள்ளது. இன்று அனுமதி கிடைக்கும், நாளை அனுமதி கிடைக்கும் என்று, கடந்த டிசம்பரிலும் கூட இவ்வாறு அதற்கு அனுமதி இருக்கின்றது என்று கூறி சென்னல் கிராமம் - 02 ம் பிரிவிலே இருக்கின்ற வைத்தியசாலை 03ம் வீதிக்காக அமைக்க இருந்த கல்வெட்டும் கூட தன்னுடைய அபிவிருத்தியின் கீழ் வருகின்றது என்று இன்று ஏறத்தாள ஒரு வருடமாகியும் செய்யப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு நேரடியாக முகங்கொடுப்பவன் நான்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளினியடி 01 இல் ஸம் ஸம் வீதியில் சிறிய வீதி கொங்கிறீட் இட்ட குறையுடன் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை பார்த்து மதிப்பீடு செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வண்டுவாய்க்கால் சந்தியில் RDD இற்கு கீழ் பெரிய வடிகான் ஒன்று உடைந்திருப்பதால் பாதை உடையக்கூடிய சாத்தியமும் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வடிகான் சீமெனட் இட்டு அடைத்து இருப்பதால் அதை உடைத்து மூட வேண்டும் என்பதால் மூடி இருக்கின்றார்கள். இதை நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் பாரம் கொடுக்கலாம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, புளியடி வீதியில் சிறிய ஒரு Slab உம் போடலாம் கல்வெட்டும் போடலாம். புளியடி வீதியின் முடிவில் இருப்பவர்கள் செல்கின்ற பாதையை நிதி ஒதுக்கீடு இல்லாவிட்டாலும் நமது JCB இனை போட்டு அந்தப் பாதையை திருத்திக் கொடுத்தால் நல்லது.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீரமுனையில் போடப்பட்ட LED மின்விளக்குகளில் 80 வீதமானவைகள் பழுதடைந்துவிட்டது. அதை பல முறை இங்கு பதிந்தும் அது நடைபெறவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கொவிட் காலங்களில் நமது ஊரில் எல்லா சேவைகளும் நடைபெற்றது. Electricity இன் பின்னடைவுக்கு காரணம் வாகனம் இல்லாதது. அத்துடன் மழை காலங்களில் அதனை தொட இயலாது. சனிக்கிழமை நான் வரும் போது மல்வத்தையில் மின்விளக்குகள் வேலை செய்யவில்லை. ஆனால் இங்கு முறைப்பாடு வரவில்லை. இன்றைக்கு மல்வத்தை ஒருவரிடம் பேசும் போது அவர் சொன்னார் மின்விளக்குகள் வேலை செய்தில்லை மின் கட்டணம் கூடுதலாக வருகின்றது என்று வெட்டப்பட்டுள்ளதாம் என்று, நான் கேட்டேன் நீங்கள் சபைக்கு முறைப்பாடு செய்தீர்களா? நீங்கள் உங்களுக்குள் கதைக்கீன்றீர்கள். நாம் மாதாந்தம் பணம் செலுத்துகின்றோம். நான் மின்னியளாலரிடம் கேட்டேன் அப்படி ஒரு முறைப்பாடு வரவில்லை என்றார்கள். உடனே சென்று பார்க்கச் சொன்னேன். கௌரவ உறுப்பினர்கள் இந்த விடயங்களில் கவனமாக இருக்க வேண்டும். LED மின்விளக்குகளுக்கு சிப்தான் போடுவது அது இன்னும் வரவில்லை. வந்தால் அதை செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வீரமுனை பாடசாலை வீதி வடிகான் மூடப்பட்டு பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றது. அதனை செய்யவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விஷவைத்தியர் வீதி மலையடிக்கிராமம் - 03 இல் கருத்திட்ட வீதியில் புதிதாக பாலம் அமைத்ததில் மீதி வேலைகள் இருக்கின்றது. 05 இலட்சத்திற்குள் முடிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வடிகான் கல்வெட்டுக்குதான் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடிகான் கல்வெட் இற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உட்கட்டமைப்பு வசதிகள் என்று வரும் போது அண்மையிலே எங்களுடைய சபையினுடைய செயலாளர் அவர்களும் நானும் 40 வீட்டுத்திட்டத்திலே சில பிரதேசங்களுக்கு விஜயம் செய்த போது எனக்கு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அங்கு வாழ்கின்ற மக்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர் இணைப்பை பெற்றிருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு குடிநீர் சரியான முறையில் சென்றடைவதில்லை. குடிநீர் அவர்களுக்கு செல்கின்ற நேரம் நள்ளிரவு 12 மணி அல்லது 01 மணியை தாண்டிய வேளைகளில் அவர்களுக்கு தண்ணீர் செல்கின்றது. அந்த தண்ணீரை சேகரித்து மறுநாள் பாவிப்பதற்கான எந்தவிதமான வசதிகளும் இல்லாத சூழ்நிலைகளில் அந்த பிரதேசத்திலே வாழ்கின்ற 50 சதவீதத்திற்கு மேலான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த சபையினால் அவர்களுக்கு முடிந்தளவு குடிநீர் சேகரிப்பதற்கான தாங்கிகளை ஓரளவு பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு விண்ணப்பத்தினை இந்த சபையிலே நான் எத்திவைக்கின்றேன். கௌரவ உறுப்பினர்கள் அதனை ஏற்றுக் கொண்டு மக்களின் நலனுக்காக அதனை நடைமுறைப்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறே கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரில் உள்ள மிக முக்கியமான பிரச்சினை அனுமதி இல்லாமல் கட்டப்படுகின்ற கட்டடங்கள். 02வது மாடிகள் கட்டப்பட்டு அதற்காக குடிநீர் இணைப்பையோ அல்லது மின் இணைப்பையோ எடுப்பதற்காக செல்கின்ற போது இந்த சபையினுடைய அனுமதி கோரப்படுகின்றது. குடிநீர் எடுப்பதற்காக அவ்வாறு கேட்பதில்லை. ஆனால் மின்சார சபையில் அதனை கேட்கின்றார்கள். 02, 03 விண்ணப்பங்கள் எனக்கு கிடைத்திருக்கின்றது. அந்த மின் இணைப்பை வழங்குவதாக இருந்தால் சபையில் வீடு கட்டுவதற்காக எடுக்கப்பட்ட அனுமதியினை கேட்கின்றார்கள். ஆனால் அனுமதி இல்லாமல் வீடு கட்டப்பட்டு இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகள் நான் அறிந்த வகையில் 20 வீடுகளுக்கு மேற்பட்ட வீடுகளுக்கு இவ்வாறான மின்சார தேவை இருக்கின்றது. இதற்கு நாம் என்ன தீர்வு காணலாம் என்பதற்கு ஒரு குழுவை நியமித்தாவது இது சட்டரீதியாக சபைக்கு எந்தவிதமான கலங்கமும் இல்லாமல் மின்சாரம் எடுப்பதற்கு அனுமதி வழங்க முடியுமா? என்பதை நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அதே போன்று கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த நல்லாட்சி காலத்தில் நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் வடிகால் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கௌரவ முன்னால் மாகாண சபை உறுப்பினர் மாஹிர் அவர்களினால் கைகாட்டிச் சந்தியில் ஒரு சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. அந்த சிறுவர் பூங்காவை விருத்தி செய்ய வேண்டும் அல்லது அதனுடைய அபிவிருத்திகளை செய்ய வேண்டும் என்று நாங்கள் பல தடவை முயற்சிகள் எடுத்தும் அதற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் சரியான அனுமதி எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் இன்று அந்த கைகாட்டிக் குளத்தை புனர்நிர்மாணம் செய்கின்ற வேலைத்திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்காவை இல்லாமலாக்கக் கூடிய ஒரு முறையிலே அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றது.

நாங்கள் சேகரித்து வைத்த கட்டின் ஓரத்தில் தோன்டி இருக்கின்றார்கள். எங்களுடைய சிறுவர் பூங்காவில் இருந்து ஏறத்தாள 03 மீற்றர், 2 ½ மீற்றர் தாழத்திற்கு தோண்டப்பட்டு இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் இந்த குளத்தில் இருந்து என்னுடைய பார்வையில் 1000 கியூப் இற்கும் மேலான மண் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இது இந்த ஊரின் நலனுக்காக செய்யப்பட்ட விடயம். இதனை அரசியல் கண்ணோக்காகக் கொண்டு அல்லது தான் இதில் பிரபல்யம் ஆக வேண்டும் என்ற எந்த நோக்கமும் இல்லாமல் அந்த பிரதேசத்தில் உள்ள ஏழை சிறுவர்களின் நல் எண்ணத்தை முன்வைத்து செய்யப்பட்டது. இதனை பாதுகாக்க வேண்டியது அல்லது இதனை விருத்தி செய்ய வேண்டியது இந்த சபையினுடைய தலையாய கடமையாகும். இந்த சபையில் இருக்கின்ற அனைத்து கௌரவ உறுப்பினர்களுக்கும் இதிலே முக்கிய வகிபாகம் இருக்கின்றது. எனவே இந்த விடயத்தை சகலரும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையிலே சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற போது சில பிணக்குகளை தீர்ப்பதற்காக சில குழுக்கள் நியமிக்கப்படுகின்றது. அவ்வாறு நியமிக்கப்படுகின்ற குழுக்கள் இந்த சபை மண்டபத்தோடு நின்றுவிடுகின்றது. நீங்கள் என்ன நோக்கத்திற்காக அந்த குழுக்களை நியமிக்கின்றீர்களோ அந்த நோக்கம் பிரதிபலிக்கவில்லை.

இந்த சபையிலே தீர்க்க முடியாத 02 பிணக்குகள். ஒன்று எங்களுடைய சபைக்கு சொந்தாமன அல்லது சபையினால் நீதிமன்றத்தில் இன்று வழக்காடப்பட்டுக் கொண்டிருக்கின்ற கடை அறைகள் உள்ள வீதியும், கடையறை சம்பந்தமான பிணக்குகளையும் தீர்ப்பதற்காக குழு ஒன்று நியமித்து இருந்தீர்கள். அதே போன்று S24 ஆம் வாய்க்காலில் இருந்து பிரிந்து செல்கின்ற அதனுடைய கிளை வாய்க்கால் அது வடிகான் அல்ல. எல்லோரும் அதனை வடிகானாக உச்சரிக்கின்றார்கள். இது S24 வாய்க்காலில் இருந்து தோட்டத்து வட்டை ஊடாக ஊடறுத்து ஆண்டிட சந்தி எல்லை வரைக்கும் ஒரு கிளை வாய்க்கால். S24 ஆம் வாய்க்காலில் இருந்து கூடுதலான தண்ணீர் வருகின்ற போது அதனை அப்புறப்படுத்துவதற்காக வைக்கப்பட்ட ஒரு கிளை வாய்க்கால். அதாவது பௌசி மாவத்தை வீதிக்கு பிற்பாடு உள்ள பகுதியை கடந்த ஆட்சிக் காலத்திலே ஏறத்தாள 1.5 மீற்றர் அகலத்திலே வடிகான் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதே நேரம் அவ்வாறான வடிகான் மீண்டும் விஷவைத்தியர் வீதி வரைக்கும் அமைக்கப்பட வேண்டும்.

அந்த வடிகான் அமைப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டதில் என்னையும் நியமித்தீர்கள். ஆனால் அந்த வடிகான் அமைக்க வேண்டிய காணியிலே எனக்கு முக்கிய வகிபாகம் இருக்கின்றது. எங்களுக்கு எந்தவிதமான எழுத்து அறிவித்தலும் இல்லை. அந்த காணிச் சொந்தக்காரர்களுக்கும் எந்தவிதமான அறிவித்தலும் இல்லாமல் சென்று பார்வையிட்டு முடிவு எடுத்திருக்கின்றார்கள். இந்த முடிவை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு நியமிக்கப்படுகின்ற குழுக்களில் நான் மீண்டும் மீண்டும் பல தடவைகள் கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களின் தலைமையிலே நியமிக்கப்பட்ட குழுக்களில் இருந்து புறக்கணிக்கப்படுகின்றேன். அவ்வாறு புறக்கணிக்கப்படுவதற்காக இந்த சபைக்கு வரவில்லை. 1473 மக்களினுடைய வாக்குகளைப் பெற்று இந்த சபைக்கு வந்தேன். மக்களுக்காக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும். என்னை நிராகரிக்க வேண்டிய தேவைப்பாடு இவர்களுக்கு இல்லை. இல்லாவிட்டால் இவர்களுடைய தலைமையிலே நிர்வகிக்கின்ற குழுவிற்கு என்னை சிபார்சு செய்யாமல் விடுங்கள் தயவு செய்து கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது உண்மையாக நடந்திருக்கக் கூடாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குழுவில் நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் சென்றுதான் பார்த்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கூட்டறிக்கையை வாசித்தால் அந்த குழுவில் நான் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் பெயரையும் உச்சரித்தேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சட்டரீதியாக எனக்கு தரவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்களும் சபையில் இருந்துதான் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வந்த குழு அங்கத்தவர்கள் அனைவரிடமும் கேளுங்கள் அவரை நாங்கள் நிராகரிக்கவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இனிமேல் அப்படி நடக்காமல் செயலாளர் அவர்கள் எழுத்து மூலமாக எனக்கும் பிரதியிட்டு செய்ய வேண்டும். குழுக்கள் சேர்ந்து சிபார்சு செய்யலாமே தவிர முடிவு எடுக்க இயலாது. S24 வாய்க்காலை பொறுத்தவரையில் அந்த வழியால் ஒரு பாதை வர வேண்டும் என்பதில் ஒருவருக்கும் முரண்பாடு இல்லை. நாம் பாதை வர வேண்டும் என்று முடிவு எடுக்கலாமே தவிர வாய்க்கால் அமைப்பது எப்படி? எதற்குள்ளால் அமைப்பது என்பது பிரதேச செயலாளரும், நீர்ப்பாசன

திணைக்களமும் எடுக்க வேண்டிய முடிவே தவிர நாம் எடுக்க வேண்டிய முடிவு இல்லை. அரச காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய காணி. நாம் எடுக்கின்ற முடிவு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த வழியால் ஒரு பாதை உருவாகுவது அவ்வளவுதான் நாம் செய்யலாம். அதற்கு அப்பால் செய்ய இயலாது. குழுக்கள் அமைப்பதற்கு காரணம் சபை இதை ஒழுங்காக செய்கின்றது இல்லை என்ற ஒரு எண்ணம் இருந்த படியினால் தான் உங்களை சென்று பார்க்கச் சொன்னது. இதை வாசித்தால் தெரிகின்றது அதில் இருக்கின்ற பிரச்சினை. நாம் கொள்கை ரீதியில் முடிவு எடுக்கலாமே தவிர சில விடயங்களில் நாம் திணிக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, S24 வாய்க்கால் என்றதில் ஞாபகம் வருகின்றது. ஒரு பாலம் ஒன்று இருக்கின்றது அஸ்ஸமா பாடசாலைக்கு செல்லுகின்ற பாலம். அது மிகவும் பணிந்த நிலையில் இருக்கின்றது. இதைப்பற்றி நீர்ப்பாசன பொறியியலாளருடனும் சொன்னேன். உங்களிடம் முதலும் தனிப்பட்ட ரீதியில் எத்தி வைத்தேன். அந்தப் பாலத்தை உயர்த்தினால் தான் தண்ணீர் வழிந்து ஓடும். அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள்.

வேறு விடயம் என்றதில், ஒக்டோபர் மாதம் 06ம் திகதி எனது தொலைபேசி Whatsapp இல் உப்புரி மலையில் நீர்த் தாங்கிகள் வழங்கப்பட்டதாக போடப்பட்டது. அதில் நான் மேலுக்கு பார்த்த விடயம் கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் மாத்திரம்தான் அவ்விடத்தில் பங்களித்திருந்தார். சபை உத்தியோகத்தர் ஒருவரும், அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தரும் பங்களித்திருந்தார்கள். நானும் மலையடிக் கிராமம் 03 இல் வசிக்கும் ஒரு வட்டார உறுப்பினர். ஏன் என்னை அந்த இடத்திற்கு அழைக்கவில்லை என்று நான் தொலைபேசி ஊடாக செயலாளர் அவர்களுடன் தொடர்புகொண்ட போது அவரால் வழங்கப்பட்ட விடயம் கௌரவ தவிசாளர் அவர்கள் உரிய வட்டார உறுப்பினரை அழைத்து அதனை வழங்கச் சொன்னார் என்று கூறினார். ஏன் அந்த வட்டாரத்திற்குள் இருக்கும் எனக்கு தனிப்பட்ட ரீதியில் ஒரு கட்சியினாலோ அல்லது வேறு வழியிலோ உறுப்பினர்களுக்கு கொடுத்து வழங்கப்படுவதை எனக்கு கேட்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை. இது உள்ளூராட்சி மன்றங்களால் வந்த தொகை. சபையால் வழங்கப்படுவது. இதை உறுப்பினர் என்ற ரீதியில் என்னை அழைக்காமல் வழங்கியதை மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்க ஒன்று. இது எந்த வகையில் வைத்து கொடுத்தது. நானும் ஒரு உறுப்பினர் என்னிடமும் 2, 3 பேரை கேட்டிருக்க வேண்டும். அவரவர் தனிப்பட்ட ரீதியில் கொடுப்பது என்றால் அவர்களது சொந்தப் பணமாக இருக்க வேண்டும். என்னை அழைத்திருக்க வேண்டும். எனக்கும் அதே 12 தாங்கிகள் எனது மக்களுக்கு வழங்குவதற்கு தர வேண்டும்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு Development Committee வேண்டும் என்று நான் தான் அந்த பிரேரணையை கொண்டு வந்தவள். எனது பெயரை அந்த பட்டியலில் உள்வாங்கப்படாததற்கு காரணம் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நீங்கள் வைத்தியசாலையின் ஒரு ஊழியர். ஊழியர் ஒரு குழுவில் இருக்க இயலாது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அது பழைய Circular, புதிய Circular ஐ கேட்டு வாசித்து பார்த்தீர்களா? இல்லை என்னிடம் உங்களை போடலாமா என்று கேட்டீர்களா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வழமையாக எந்த நிர்வாகத்திலும் இருப்பவர்கள் அந்த நிர்வாக ஆலோசனை குழுவில் நியமிக்க இயலாது. உங்களது Grade இன் படி அப்படி ஒன்று இல்லாவிட்டால் நான் வைத்திய அத்தியட்சகரிடம் கேட்டு விட்டு உங்களை போடுவதில் எனக்கு பிரச்சினை இல்லை. அதில் சங்கடப்படப்போவது நீங்கள்தான். நான் எனது அனுபவத்தில் சொல்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சங்கடம் என்பது பிறகுதானே. அதை எதிர் நோக்குகின்ற சக்தி என்னிடம் இருக்கின்றது. அதில் தற்போது பெயர் நீங்கள் போடாவிட்டாலும் வைத்திய அத்தியட்சகர் போட்டு அனுப்பிவிட்டார். மற்ற விடயம் பெண்களாகிய நாங்கள் 04 பேர் இருந்து 05 பேர் இருந்து தற்போது 06 பேர் ஆகிவிட்டோம். ஏதாவது ஒரு கூட்டங்களுக்கு அழைப்பிதழ் வந்தால் அதை முன்கூட்டி அறிவிக்க வேண்டும். உங்களுக்கு உடனடியான அழைப்பிதழ்கள் வந்தால் அது யாருக்கு எவருக்கு அறிவிக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். ஒரு சிலருக்கு மட்டும் கடிதம் அனுப்பி மற்றவரை காலையில் 10 நிமிடத்திற்குள் வர வேண்டும் என்று சொல்லி அவதிப்படுத்துவது என்பது எந்தவகையிலும் நியாயம் இல்லை. ACLG Office இல் நடந்த இந்த கூட்டத்திற்கு எந்த வகையில் இந்த கடிதத்தை அனுப்பீனீர்கள்? அவர்கள் பெயர் குறிப்பிட்டு அனுப்பினார்களா? இல்லை நீங்கள்தான் பெயரை தெரிவு செய்தீர்களா? எந்த தூரமாக இருந்தாலும் பொத்துவில் இருந்து யாழ்ப்பாணம் வரை கூட்டம் என்றால் நாங்கள் போக வேண்டும். பக்கத்தில் இருப்பதற்கு எங்களுக்கு அழைப்பு தர இயலாது என்றால் இது எந்த வகையில் நியாயம். எந்த வகையிலும் நீங்கள் தூரப்படுத்தினாலும் அல்லாஹ் தூரப்படுத்தமாட்டான் என்பதையும் இந்த இடத்தில் கூறிக் கொள்கின்றேன்.

இன்னொரு விடயம் ஒரு சந்தோசமான விடயத்தையும் சொல்ல வேண்டும். எங்களது ஊரில் உள்ள சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சைக்காக பெறப்பட்ட சத்திர சிகிச்சை இயந்திரத்தை எங்களது ஊரில் உள்ள நம்பிக்கையாளர் சபை ஊடாக ஊர் மக்களின் உதவியுடனும், அரச அதிகாரிகளின் உதவியுடனும் இந்த சபை உறுப்பினர்கள், தவிசாளர் அனைவரினது உதவியுடனும் ஒரு கோடி ரூபாவின் பெறுமதியாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மிகவும் சந்தோசம் அடைந்து சத்திரச்சிகிச்சையை 1, 2 என்று இருந்தது 30, 50 என்ற ரீதியில் நடந்து கொண்டிருப்பதை மிகவும் சந்தோசத்துடன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஒரு உத்தியோகத்தர் என்ற ரீதியிலும் எங்களது வைத்திய அத்தியட்சகரின் அனுமதியோடும் இதை நான் இந்த இடத்தில் தெரியப்படுத்துகின்றேன். இந்த பெறுமதியான இயந்திரத்தின் விபரங்கள் வேண்டும் என்றால் ஒவ்வொரு பெயருடனும் எங்களது தவிசாளர் அவர்களிடம் ஒப்படைப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் நீர் இணைப்பு, மின்சார இணைப்பை பற்றி பேசினீர்கள். மின்சார சபை அனுமதி இல்லாத கட்டடங்களுக்கும் இணைப்பு கொடுக்கின்றது. நீங்கள் சொல்கின்ற பிரச்சினை ஒருவர் ஒரு மாடி வீட்டை சட்ட விரோதமாக கட்டுகின்றார். அவர் இணைப்பை எடுக்கின்றார். 2ம் மாடியை கட்டிவிட்டு அதற்கு வேறாக இணைப்பை கேட்கின்றார் என்றால் அது கொடுக்க இயலாது. ஆதனவரி இலக்கம் கொடுப்பது அனுமதிக்கப்பட்ட கட்டடங்களுக்கு மாத்திரம் தான் கொடுக்கலாம். கொழும்பு மற்ற இடங்களில் அனுமதி இல்லாத கட்டடங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கப்படுவதில்லை. இணைப்பு கொடுப்பது என்பது அக் கட்டடத்திற்கு அங்கீகாரம் கொடுப்பது. அது செய்ய இயலாது. அப்படி என்றால் அவர்கள் கட்டடங்களுக்கு விண்ணப்பத்தை போட்டு தண்டப் பணத்தை செலுத்தி அதற்கு பின்னர் செய்யலாம். அவர்கள் செய்வது வேறு காரணத்திற்காக. அரசாங்க வருமானத்தை குறைப்பதற்கு நாம் உடந்தையாக இருக்க இயலாது.

உண்மையாக மேல் மாடியில் ஒரு கைத்தொழில் நடக்கின்றது என்றால் அதற்கு கொமர்சியல் கொடுக்கலாம். நீர் இணைப்பு கூட பிரச்சினை இதுதான். 90 வீதமான கட்டுமான வேலைகள் சட்டவிரோதம். இது ஒவ்வொன்றுக்கும் வழக்குப் போட்டால் சபையின் வருமானம் போதாது சட்டத்தரணிக்கு கொடுப்பதற்கு. ஆனால் சபைக்கு Audit Query வந்திருக்கின்றது. அரச உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பிணக்கில் ஈடுபட்டு மாகாண சபை விளக்கம் கேட்டு அனுப்புகின்றது இதில் என்ன நடந்த என்று, அவரது கட்டடமோ அனுமதி இல்லாத கட்டடம். சபை தீர்மானம் எடுத்து 4, 5 பேருக்கு வழக்குப் போடுகின்றோம். ஆனால் அந்த வழக்குகள் சிவில் வழக்குகள். ஒவ்வொரு வழக்கிற்கும் 5000.00 ரூபா செலுத்த வேண்டும். ஆனால் செய்யாமல் இருக்கவும் இயலாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொலீசாரால் நேரடியாக வழக்குத் தாக்கல் செய்கின்ற அனுமதியை UDA இடம் நாம் கேட்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
UDA தந்துவிட்டது. வழக்கு வைத்தால் சபைதான் பணம் கொடுக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நேரடியாக வழக்கில் பங்குபற்ற இயலாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் சட்டத்தரணி வைத்துதான் செய்யவேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அனுமதி எடுத்து அவர்கள் தாக்கல் செய்கின்ற மாதிரி சட்டத்தரணி இல்லாமல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் செய்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படி இருந்தால் ஆய்வு செய்து பார்ப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மேல் மாடிக்கு தண்ணீர் கொடுப்பதற்கு GS இன் அனுமதியோடு வழங்கினால் மற்றயதையும் GS உடன் செய்யலாம்தானே.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு வளவுக்குள் ஒரு இணைப்புதான் சட்டபூர்வமாக கொடுக்கலாம். 2வது இணைப்பு கொடுப்பது என்றால் சபையில் ஆதனவரி இலக்கம் ஒன்று கொடுத்தால்தான் அவர்களுக்கு அடுத்த இணைப்பு கொடுக்கலாம். இல்லாவிட்டால் கொமர்சியல் கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீர்வழங்கல் சபையினுடைய அங்கீகாரம் இருக்கின்றது. கீழுக்கும் மேலுக்கும் எந்த தொடர்பும் இல்லாமல் படி வெளியில் இருந்தால் அதற்கு GS ஒரு வீட்டிலக்கம் கொடுத்து வழங்கப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படி என்றால் Building Approval தேவையில்லையே. நீர் வழங்கல் சபையோ எல்லாம் செய்யலாம். மின்சார சபையும், நீர் வழங்கல் சபையும் வருமானத்தை கூட்டுவதற்குரிய வழிமுறைகளை பார்கின்றது. நாம் அனுமதி இல்லாத கட்டடங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்து உடைக்கலாமே தவிர மற்ற எல்லாம் வழங்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கேட்பது கட்டடம் தவறுதலாக கட்டப்பட்டு விட்டது. ஆனால் அவர்களுக்கு நீர் இணைப்பும், மின் இணைப்பும் தேவை அனுமதி எடுப்பதற்கு என்ன செய்யலாம்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவர்கள் சபைக்கு Building Approval எடுத்து அதற்குரிய தண்டத்தினை செலுத்தி சட்டபூர்வமாக கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உப்புரி மலையில் உயர்ந்த பிரதேசம் ஒன்று இருக்கின்றது. அங்கு மின் கம்பமே இல்லை. அதனால் வெளிச்சம் இல்லை. சிறிய பிள்ளைகளோடு 8, 9 குடும்பம் வசித்து வருகின்றது. அங்கு இருக்கின்ற பாதையும் மிகவும் மோசமாக இருக்கின்றது. மண் இட்டு அப்பாதையை சீர்திருத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியது போல் ஏன் இந்த விடயத்தை என்னிடம் எத்தி வைக்க இயலாது. விளினியடி வட்டாரத்திற்கு வென்ற உறுப்பினர் நான். உப்புரி மலைக்கு மண் போடுவதை என்னிடமும் எத்தி வைக்கலாம்தானே. கௌரவ உறுப்பினருக்கு அங்கு வளவு இருப்பதனால் இதை கூறுகின்றார். எனக்கும் தெரியும் நான் தாங்கிகள் கொடுக்க சென்ற இடத்தில் அந்தப் பாதையை பார்த்துக்கு வந்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தயவு செய்து சரியான விளக்கத்தை தெரியாமல் நீங்கள் கதைக்கின்ற நேரம் இவ்விடத்தில் இருக்க இயலாமல் இருக்கின்றது. ஒரு வட்டாரத்தின் அங்கத்தவரை விளக்கி ஒரு ஜனநாயக ரீதியில் ஆட்சி நடாத்துவது என்றால் வட்டாரத்து அங்கத்தவர் கட்டாயம் எந்த விடயத்திலும் உள்வாங்கப்பட வேண்டும். அதனோடு அந்தப் பகுதியில் வாழ்கின்ற பட்டியல் அங்கத்தவர்களையும் உள்வாங்குவது நல்ல விடயம். ஆனால் பிரச்சினையாக்குவது மனவருத்தத்திற்குரிய விடயம். நீர் தாங்கிகள் PSDG திட்டத்தின் கீழ் மல்லிகை தீவு மக்களுக்கு கொடுத்தது. எஞ்சியதை நீர் இல்லாத மல்காம்பிட்டி, நீர் கிடைக்காத இடங்களுக்கும் அந்த உறுப்பினர்கள் மூலமாக இனங்கண்டு GS இன் அனுமதியோடு கொடுக்கச் சொன்னது. இதில் நான் அரசியல் செய்யவில்லை. நான் அரசியல் செய்வது என்றால் நானே சென்று கொடுத்திருப்பேன். நான் அந்த வட்டாரத்து உறுப்பினரை அழைத்து கொடுக்கச் சொன்னேன். அவ் வட்டாரத்தில் இன்னொரு உறுப்பினர் வாழ்ந்தால் அவரை அழைப்பது உங்களுக்கு பெருந்தன்மை இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
எனது விடயம் என்னவென்றால் செயலாளர் சொன்னார் நான் சென்று கொடுத்தேன். வேற நான் List பண்ணவும் இல்லை. பொதுமக்களுக்கு கொடுத்த பின்னர் தேசியப் பட்டியல் உறுப்பினர் Call எடுத்து நான் வர இயலாதா என்றால் வெற்றி பெற்ற நான் கொடுத்ததில் என்ன பிழை. நான் உறுப்பினராக இருந்து இந்தக் குழு ஒரு வடிகான் கட்டுவதற்கு அது கூட செய்யாமல் ஏனைய வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றது. அதை நான் சுட்டிக்காட்ட விரும்பவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையில் எவ்வளவு எதிர்ப்பு தெரிவித்து என்ன செய்தாலும் சபை நடவடிக்கைகளில் உங்களை ஒரு காலமும் புறக்கணிக்கவில்லை. சில நேரங்களில் தவறுதலாக விடுபட்டிருக்கலாம். தயவு செய்து உங்களது வட்டாரத்தில் ஒரு வேலை நடக்கும் போது நிச்சயமாக அது உங்களுக்கு தெரிய வேண்டும். அந்த வட்டாரத்தில் வேறு அங்கத்தவர்களும் வாழ்கின்றார்கள் என்றால் அவர்களையும் சேர்த்து செய்வதில் சந்தோசம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பொதுச் சந்தைக்கு வெளியூரில் இருந்து வியாபார நோக்கத்திற்காக வருகின்றார்கள். அவர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படக்கூடிய அளவுக்கு அப் பொதுச் சந்தையில் மலசலகூடங்கள் இருப்பதனால் அதனை அவர்களுக்கேற்ற பாதுகாப்பான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு Bathroom வசதிகளையும் செய்து கொடுத்தால் நல்லது. பெண்களுக்கு என்று தனியாக பெயர் குறிப்பிட்டு இருந்தால் வியாபார நோக்கத்திற்காக வருகின்றவர்கள் கழுவுவதற்கு வசதியாக இருக்கும். எல்லா உறுப்பினர்களும் கதைத்ததை நானும் கதைக்க விரும்பவில்லை. கடந்த மாதம் கடாபி ஹொட்டலுக்கு பக்கத்தில் இருக்கின்ற பிரச்சினை ஒன்றுக்காக எமது சபையில் இருந்து கௌரவ உறுப்பினர்கள் கௌரவ உப தவிசாளர் தலைமையில் சென்றார்கள். அந்த வட்டாரைத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கடந்த சில மாதங்களாக சபைக்கு வராத காரணத்தினால் என்னைக்கூட அழைக்காமல் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு எடுத்தார்களா? என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. இப்படியான சம்பவங்கள் இந்த சபையில் நடப்பதை உங்களது காதுக்கு எத்திவைக்கின்றேன். இது யார் மூலம் சபை அங்கத்தவர்களை உள்வாங்கி செய்ய வேண்டும் என்பதை மிகவும் தாழ்மையாக கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எல்லோரும் இருக்க வேண்டும் என்று விரும்புவது நியாயம். அதில் நீங்கள் அந்த வட்டாரத்தில் வசிக்கின்றீர்கள் என்பது தற்செயலாக வந்தது. நீங்கள் நியமிக்கப்பட்டது அந்த வட்டாரத்தினால் இல்லை. பட்டியல் அங்கத்தவர்கள் வட்டார அங்கத்தவரோடு போட்டி போட இயலாது. அவர் அந்த மக்களால் அதற்கு என்று தெரிவு செய்யப்பட்டவர். நீங்கள் கட்சி எடுத்த வாக்கினால் வந்திருக்கின்றீர்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கலாமே தவிர அவர்களுக்கு போட்டியாக இருக்கக் கூடாது. அது ஜனநாயகத்திற்கு விரோதமான விடயம். அதற்கு மேலாக நான் வசிப்பதால் என்னையும் கட்டாயம் எடுக்க வேண்டும் என்றால் அப்படி ஒரு சட்டம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று பருவ மழை ஆரம்பித்திருக்கின்ற காலம். சுகாதாரப் பிரிவுகளினுடைய நடவடிக்கையாக இருந்தாலும் ஒரு கிராமத்தின் அடிப்படை பிரச்சினைகளை தீர்வு காண்பதுதான் எமது நோக்கமாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் மலேரியா நுளம்பு இன்று ஊரின் பல பாகங்களிலும் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அபாயகரமான டெங்கு உற்பத்தியாகின்ற நடவடிக்கையை எமது பிரதேச சபையின் உறுப்பினர்கள் அந்தந்த வட்டாரத்தின் மூலமாவது ஒரு முன்னேற்றகராமன செயற்பாடு ஒன்றை முன்னெடுப்பது சிறப்பாக அமையும் என்பது எனது கருத்து.

அடுத்தது இந்த சபையில் சம்புமடு உப தபால் அலுவலகம் சம்மந்தமாக கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் முன்வைத்தார்கள். அதற்கு எந்தவிதமான முடிவும் எட்டப்படவில்லை. இருந்த போதிலும் அந்த விடயத்தில் நான் மிகவும் கருசணையோடு தொடர்ந்தவனாக இருக்கின்றேன். அதில் சிறு மாற்றம் செய்யலாம். சென்னல்புரம் உப தபால் அலுவலகமாக இன்றைக்கு ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் இருக்கின்ற காரியாலயத்தை வண்டுவாய்க்கால் சந்திக்கு கொண்டு வந்து அதில் இருக்கின்ற கட்டிடத்தில் நிறுவினால் கூடுதலான பிரச்சினைகள் குறையும் என்பதுதான் எனது கருத்து. அதற்கான திணைக்களம் சார்பான ஆலோசனைகளை நான் பெற்றுத்தருவேன். அத்தோடு நானும் ஒரு பட்டியல் உறுப்பினராக இருக்கின்ற படியினால் நாங்கள் எங்கு சென்றும் மக்கள் குறைகளை கேட்பதற்கு எங்களுக்கும் அனுமதி இருக்கின்றது. அந்த அடிப்படையில் உப்புரி மலையில் நான் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்ட வேலையில் உண்மையிலே வழங்கப்பட்ட நீர் தாங்கிகள் பிரயோசனமான முறையில் வழங்கப்பட்டிருக்கின்றது. அதை நாங்கள் பாராட்ட வேண்டும். இருந்த போதிலும் சிலரது குறைபாடுகள் வைக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக தேவையானவர்கள் எனது சார்பாகவும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அமீர் அலி பொதுநூலகத்திற்கு அருகாமையில் இருக்கின்ற ஓய்வு பெறுகின்ற இடம். அந்த இடத்தில் நான் இருக்கின்ற வேளையில் என்னைக் கண்டவுடன் கதைத்தார்களோ தெரியாது. அவ் இடம் இருப்பதை விட சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது அவர்களது கதைச் சுருக்கமாக இருந்தது. இன்னும் அழுக்குத் தண்ணீரை பார்த்துக் கொண்டு இருப்பதா? இதற்கு பிரதேச சபை என்ன செய்கின்றது என்று பேசிக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் கூறியவற்றில் சில உண்மைகளும் இருக்கின்றது. எதிர்காலத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
குறை கூறுவது மனிதனின் இயல்பு. நீர்ப்பாசனத்திற்குரிய வாய்க்கால். இவ்வளவு பேர் போய் இருக்கின்றார்கள் ஏதாவது செய்கின்றார்களா? இல்லை அங்கு சென்று இருந்து விமர்சித்துவிட்டு வருகின்றார்கள். அவர்கள் நினைத்தால் எமது உதவியை நாடி அந்த வாய்க்காலை துப்பரவு செய்து வயல்காரவர்களுடன் சேர்ந்து பயிர் வைத்து செய்யலாம். இது ஒன்றும் செய்வதில்லை. அங்கு செல்கின்ற கூட்டம் விமர்சிப்பதற்குதான்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப்லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சம்மாந்துறையின் வளமாக இருந்த போக்குவரத்து சபை எல்லோரும் அறிவோம். அந்த விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இல்லாதபடியினால் அந்த

விடயத்தில் மீண்டும் ஒரு முறை கருசணை எடுத்து அதற்கு முயற்சி எடுத்தால் நிச்சயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். இன்று பட்டியல் உறுப்பினர்களை ஒரு வகையான 2ம் தரத்தைப் போல் பேசி இருக்கின்றீர்கள். அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதே நேரத்தில் வாக்குகளைப் பெற்றவர்கள் வட்டாரங்களில் இல்லாமல் மக்கள் ஏங்கி அவர்களை தேடித்திரிகின்றார்கள். அந்த நிலையில் நாங்கள் பட்டியல் உறுப்பினர்கள்தான் அவ்வாறான பிரச்சினைகளை முகங்கொடுத்து அவர்களுக்கு உதவியாக இருந்து கொண்டிருக்கின்றோம் என்பதை இச் சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபை அரசியல் ரீதியாகவோ நியமன ரீதியாகவோ ஒருவரையும் கொச்சப்படுத்தவில்லை. நீங்களே உங்களை கொச்சப்படுத்துகின்றீர்கள். ஆனால் தயவு செய்து ஹன்சார்ட் பதிவுக்கு பேசுவதை யோசித்து பேசுங்கள். ஒரு கௌரவம் இருக்க வேண்டும் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். எந்த விடயத்தையும் சுருக்கமாக பதிவு செய்ய வேண்டும். இந்த சபையை ஒரு அரசியல் களமாக மாற்றாமல் அதில் நீங்கள் எதுவும் அடையப்போவதில்லை. மற்றவரை குறைகூறுவது இதைப் பற்றி பேசுவதற்காக இந்த சபையை பயன்படுத்தாதீர்கள். நமது அரசியல் முரண்பாடுகள் தனிப்பட்ட விடயங்கள். இதற்குள் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து நமக்கு வாக்களித்த மக்களுக்கு எப்படி சேவைகள் போய் சென்றடையலாம் என்ற எண்ணத்துடன் சேவையாற்றினால் எல்லோரும் சந்தோசமாக இருப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய பிரதேச சபை கட்டடத்தை நில அளவை திணைக்களத்திற்கு வாடகைக்குதான் கொடுத்திருக்கின்றோம். அதில் இருந்த பெயர் கல் மறைக்கப்பட்டு இதுவரை காலமும் இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உடனடியாக துப்பரவாக்கி வைக்கச் சொல்லுங்கள். நாளை காலையில் நான் வந்து பார்ப்பேன் என்று சொல்லுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்காவில் 02 மரங்கள் அழிவடைந்துள்ளது. அந்த மரங்களுக்கு பதிலாக வேறு இரண்டு மரங்களை நடுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். பூ மரத்து சந்தியில் ஒரு சிறிய மரம் ஒன்று வைக்க வேண்டும். எனது செலவில் வேண்டும் என்றாலும் செய்கின்றேன். எதிர்வருகின்ற வரவு செலவுத் திட்டத்தில் பிரதேச சபை மட்டத்தில் செய்வதில் ஒரு Bus Halt அமைப்பதற்கு ஒரு முன்மொழிவு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் ஏதாவது அனுமதிகள் தேவைப்படும் பட்சத்தில் அங்கீகாரம் வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த பூ மரத்து சந்தியில் பிறந்து வளந்தவன் நான். அந்த பூ மரத்திற்கு ஒரு சரித்திரம் இருக்கின்றது. முதல் ஒரு வாகனம் செல்வதற்கான பாதை தற்போது இரண்டு வாகனம் செல்வதற்கான பாதை. முதல் நாம் நமது எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வேண்டும். அவ்விடத்தில் எதுவும் செய்தால் போக்குவரத்திற்கு ஒரு தடை. மஸ்ஜிதுல் உம்மா அருகில் பாதை வந்தவுடன் அது பயங்கரமான ஒரு இடம். அவ்விடத்தில் Bus Halt அமைக்க இயலாது. அது 04 பாதைகள் சந்திக்கின்ற இடம்.

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் சொன்னதை மறந்து விட்டேன். நான் ஒரு கடிதம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சிறுவர் பூங்கா ஓரமாக மண் இடச்சொல்லி ஒரு கடிதம் அனுப்பச் சொன்னேன். அது அனுப்பப்பட்டதா?

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தக் கடிதம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனக்கும் ஒரு பிரதி கிடைத்திருக்கின்றது. ஆனால் அந்தக் கடிதத்திற்கான முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதுவும் அவ்விடத்தில் இல்லை. முடியுமாக இருந்தால் இந்த சபை முடிந்தவுடன் நேரடியாக சென்று பார்வையிடலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அதை பார்த்துவிட்டேன். நான் பொறியியலாளருடன் நேரடியாக பேசி அதை செய்கின்றேன். இத்துடன் சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை